## எல்லா இடங்களிலும் உடனடியாக மழைநீர் அகற்றப்பட்டது

# அனைத்து சுரங்கப்பாதைகளிலும் போக்குவரத்து சீராக உள்ளது!

## நகராட்சி நிர்வாகத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து – அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

சென்னை,அக்.18–

**அனைத்து இடங்களிலும் உடனடியாக மழைநீர் அகற்றப்பட்டது எனவும், அனைத்து சுரங்கப்பாதைகளிலும் போக்குவரத்து சீராக உள்ளது எனவும் நகராட்சி நிர்வாகத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து அமைச்சர் கே.என்.நேரு பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் வடகிழக்குப் பருவமழையினைத் தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் குறித்தும், துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்தும் நேற்று முன் தினம் (16.10.2024) ரிப்பன் கட்டட அலுவலகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் சென்னையில் பெய்த மழையின்போது, எந்தவித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். பெருமழை வரும் என்று வானிலை அறிஞர்கள் சொன்னதைத் தொடர்ந்து, தமிழ்நாடு துணை முதலமைச்சர் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து 2 முறை கூட்டங்கள் நடத்தி அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் , அமைச்சர் பெருமக்கள் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்களுடன் கூட்டம் நடத்தி என்னென்ன நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார்கள். அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக தான் 44 செ.மீ. மழை பெய்யும் என்று சொன்னால், என்றைக்கும் இல்லாத அளவில் நேற்று ஒரு நாள் மட்டும் கிட்டத்தட்ட 17 செ.மீ. முதல் 20 செ.மீ. வரை மழை பெய்துள்ளது. இதில் சில இடங்களில் கூடுதலாக 30 செ.மீ. மழைப்பொழிவும் ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், ஒரு சில இடங்களைத் தவிர அனைத்து இடங்களிலும் மழைநீர் உடனடியாக வெளியேற்றப்பட்டுள்ளது. அனைத்து சுரங்க ப்பாதை களிலும் போக்குவரத்து சீராக உள்ளது.

முதலமைச்சர் நேற்று காலை மக்களைச் சந்திக்கின்ற போது, வெள்ளச் சேரியாக இருந்து வேளச்சேரியை, வேளச்சேரியாக திருப்பி தந்தமைக்கு மக்கள் மிகவும் பாராட்டி நன்றி தெரிவித்தனர். நாராயணபுரம் ஏரி பகுதியில் உள்ள மக்களை சந்தித்தபோது, அங்குள்ள மக்கள் 2008 முதல் இந்தப் பகுதியில் இருக்கிறேன். இந்த வருடம் தான் ஒரு சொட்டு மழைநீர் இல்லாமல் முழுவதும் வடிந்திருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

குறுகிய நேரத்தில் 20 செ.மீ. அளவு மழைப் பொழிவு இருந்தாலும், அனைத்து இடங்களில் மழைநீர் உடனடியாக வடிந்துள்ளது.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, அனைத்து மண்டலங்களிலும் கண்காணிப்புப் பணிகள் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ள இந்திய ஆட்சிப் பணி நிலையில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களின் மேற்பார்வையில் பணிகள் நடைபெற்றன. ஒவ்வொரு பகுதிகளிலும் கடந்த ஆண்டு பெய்த மழையின் அனுபவத்தின் அடிப்படையில் 990 மின்மோட்டார் பம்புகள், கிட்டத்தட்ட 400 டிராக்டர்கள் வைக்கப்பட்டு, உடனடியாக மழைநீர் வெளியேற நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு, அங்கு தங்க வைக்கப்பட்ட பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், பால், பிஸ்கெட், ரொட்டி, உணவு, மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

நேற்று (15.10.2024) ஒரு நாள் மட்டும் 3,17,935 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. இன்று (16.10.2024) காலை 4,00,950 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பொதுமக்களின் பாதுகாப்பு கருதி அனைத்து முன்னெச்சரிக்கை மற்றும் முன்னேற்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 388 அம்மா உணவகங்களில் நாள்தோறும் சராசரியாக 45,800 நபர்கள் சாப்பிடுகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் இன்றும் (16.10.2024), நாளையும் (17.10.2024) அம்மா உணவகத்தில் உணவு இலவசமாக வழங்கப்படும் என உத்தரவிட்டதனைத் தொடர்ந்து, இன்று காலை 65,700 நபர்கள் அம்மா உணவகத்தில் உணவருந்தினார்கள். கடந்த மழையின்போதும் இந்த அறிவிப்பினை தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்தார்கள்.

2011ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 400 கி.மீ. நீளத்தில் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டது. திருப்புகழ், இ.ஆ.ப., தலைமையிலான குழுவின் பரிந்துரையின்படி, சென்னையில் எந்தெந்த இடங்களில் மழைநீர் வடிகால் அமைக்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் தற்போது 1,135 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்க பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, முதற்கட்டமாக 781 கி.மீ. நீளத்திற்கு ஒப்பந்தம் விடப்பட்டு மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பிற பகுதிகளில் பணிகள் நடைபெற்று வருகிறது. இவ்வாறு மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்ட காரணத்தினால் தான் மழைநீர் உடனடியாக வடிந்துள்ளது. இரண்டாம் கட்டமாக ஒப்பந்தம் விடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

சென்னையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், நெடுஞ்சாலைத்துறை, சென்னை குடிநீர் வாரியம் ஆகிய துறைகளின் சார்பில் நடைபெறும் பணிகளின் காரணமாக ஆங்காங்கே உள்ள தடுப்புகளின் காரணமாக ஒரு சில இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளது. மற்ற அனைத்து இடங்களில் மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்ட காரணத்தினால் மழைநீர் வேகமாக வடிந்துள்ளது.

கிண்டி ரேஸ்கோர்சிலிருந்து வரும் மழைநீரை வெளியே விடாமல் அங்கேயே முறைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், அங்கு ஏற்கனவே உள்ள 3 குளங்களை மாநகராட்சியின் சார்பில் ஆழப்படுத்தி அகலப்படுத்தும் பணிகள், மேலும் கூடுதலாக 4 குளங்கள் அமைத்திடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் ஒரு குளத்திற்கான பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

கடந்த ஆட்சி காலத்தில் அவசரகதியில் எந்தவிதமான கள இணைப்புகளும் இல்லாமல் தொடங்கப்பட்ட கட்டுப்பாட்டு அறை முழுமையான தகவல்கள் இன்றி செயல்பட்டு வந்தது. ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, ரூ.57.76 கோடி மதிப்பீட்டில் சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும் 24/7 இயங்கக் கூடிய முத்தமிழறிஞர் ட்கலைஞர் மு.கருணாநிதி மாளிகை கட்டப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த கட்டுப்பாட்டு மையம் தற்பொழுது பல்வேறு புதிய கள தகவல்கள், மழைமானிகள், கால்வாய்களில் நீர்ப்போக்கு நிலவரம், சுரங்கப்பாதை களின் நிலவரம் உள்ளிட்ட அனைத்து துறைகளுடன் தரவுகளை நேரடியாக ஒருங்கிணைத்து முழுமையான உட்கட்டமைப்புகள் மற்றும் தரவுகளை கொண்டு தற்போது சிறப்பாக இயங்கி வருகிறது. இதில் மென்பொருள் மற்றும் வன்பொருள் மேம்படுத்தப்பட்டு நவீன தொழில்நுட்பத்துடன் இயங்கி வருகின்றன எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, எம்.பிருதிவிராஜ், (வருவாய் (ம) நிதி), சென்னை குடிநீர் வடிகால் வாரிய செயல் இயக்குநர் செ.சரவணன், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மேலும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் விவரம் குறித்து அமைச்சர் கே.என்.நேரு கூறிய தாவது:**

**● பெருநகர சென்னை மாநகராட்சி**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 1,135 கி.மீ. நீளத்திற்கு புதியதாக மழைநீர் வடிகால்வாய்கள் பணிக்கு எடுக்கப்பட்டு 785 கிலோ மீட்டர் முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 58.33 கோடி மதிப்பில் கடப்பாக்கம் ஏரி மற்றும் ரூ.37.11 கோடி மதிப்பில் 41 நீர்நிலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

2022 ஆண்டு சென்னையில் வெள்ளத்தை கட்டுப்படுதத நிரந்தர தீர்வு பெற ஓய்வு பெற்ற திருப்புகழ், தலைமையில் பல்வேறு தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது.

இக்குழு சென்னை மாநகராட்சியின் பல்வேறு இடங்களை பார்வையிட்டு பல்வேறு துறைகளை சார்ந்த 161 பணிகளை முன்மொழிந்து உள்ளது. இதில் 101 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

அதில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 57 பணிகள் பரிந்துரைக்கப்பட்டு 49 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 8 பணிகள் மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைதுறைக்கு பரிந்துரைக்கப்பட்ட 17 பணிகளில் 15 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 பணிகள் நடவடிக்கையில் உள்ளது.

நீர்வளத்துறைக்கு பரிந்துரைக்கப்பட்ட 87 பணிகளில் 37 பணிகள் முடிக்க ப்பட்டுள்ளது. மீதமுள்ள 50 பணிகள் நிறை வேற்றப்படவுள்ளன.

கடந்த ஆட்சி காலத்தில் அவசரகதியில் எந்தவிதமான கள இணைப்புகளும் இல்லாமல் தொடங்கப்பட்ட கட்டுப்பாட்டு அறை முழுமையான தகவல்கள் இன்றி செயல்பட்டு வந்தது.

இந்நிலையில் ரூ.57.76 கோடி மதிப்பீட்டில் சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும் 24/7 ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்துடன் கூடிய முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த கட்டுப்பாட்டு மையம் தற்பொழுது பல்வேறு புதிய கள தகவல்கள், மழைமானிகள், கால்வாய்களில் நீர்ப்போக்கு நிலவரம், சுரங்கப்பாதைகளின் நிலவரம் உள்ளிட்ட அனைத்து துறைகளுடன் தரவுகளை நேரடியாக ஒருங்கிணைத்து முழுமையான உட்கட்டமைப்புகள் மற்றும் தரவுகளை கொண்டு தற்போது சிறப்பாக இயங்கி வருகிறது.

இதில் மென்பொருள் மற்றும் வன்பொருள் மேம்படுத்தப்பட்டு நவீன தொழில்நுட்பத்துடன் இயங்கிவருகின்றன.

ரூ. 232.26 கோடி மதிப்பில் புதிய நகர்ப்புர நலவாழ்வு மையங்கள், புதிய நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள், புதிய நகர்ப்புர சமூக சுகாதார நிலையங்கள், இரவு தங்குமிடங்கள், பள்ளிக் கட்டடங்கள், மயான பூமி மேம்பாட்டு பணிகள் என 258 கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ரூ999.03 கோடி மதிப்பீட்டில் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் திடக்கழிவுகளை உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் பிரித்தெடுத்து நிலத்தை மீட்டெடுத்தல் பணிகள் நடைபெற்று வருகிறது மற்றும் மாதவரத்தில் நாளொன்றுக்கு 100 டன் ஈரக்கழிவுகள் மூலம் இயற்கை உயிரி எரிவாயு தயாரிக்கும் நிலையம், சின்ன சேக்காட்டில் பிளாஸ்டிக் கழிவுகள் மூலம் எரிபொருள் தயாரிக்கும் ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

ரூ.103.53 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக 2141 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தில் 356 பள்ளிகளில் 65,013 மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர்.

ரூ.138.81 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக் கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் விக்டோரியா பொது மண்டபம் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றது.

ரூ.130.93 கோடி மதிப்பீட்டில் காதர் நவாஸ் கான் சாலை, மானிகர் சௌத்ரி (M.C) சாலை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை மற்றும் அருணாசலேஷ்வரர் கோயில் தெரு ரேஸ் கோர்ஸ் சாலை மறுவடிவமைப்பு செய்தல் பணிகள் நடைபெற்று வருகிறது.

**● பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகள்**

மழையின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சாய்ந்த 64 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன.

சென்னை பெருநகர மாநகராட்சி சார்பில் ஒவ்வொரு மையத்திலும் 200 நபர்கள் வரை தங்கும் வகையில் 300 இடங்களில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் நிவாரண மையங்கள்அமைக்கப்பட்டுள்ளது.

பருவமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 98 மைய சமையல் கூடங்கள் வாயிலாக உணவு சமைத்து வழங்கப்படுகிறது.

நேற்று முதல் இன்று (16.10.2024) காலை வரை 7 லட்சத்து 18 ஆயிரத்து 885 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளும் எந்தவித இடையூறுமின்றி போக்குவரத்து சீராக உள்ளது.

நீர்தேங்கியுள்ள 130 இடங்களில் நீர் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1,223 மோட்டார் பம்புகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது, மேலும், வெளிமாவட்டங்களிலிருந்து 303 மோட்டார் பம்புகள் வரவழைக்கப்பட்டுள்ளன.

கடந்த 24 மணிநேரத்தில் சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறைக்கு 6120 அழைப்புகள் வந்துள்ளன. இதன் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொளப்பட்டு வருகின்றன.

தற்பொழுது திடக்கழிவு மேலாண்மை பணிகளை பதினைந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் மேற்கொண்டு வரும் நிலையில் மேலும் பிற மாவட்டங்களிலிருந்து கூடுதலாக 500 தூய்மை பணியாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

மீட்புப்பணிக்காக 103 படகுகள் தயார் நிலையில் உள்ளது. பொதுசுகாதாரத்துறையின் சார்பில் சென்னையில் நாள்தோறும் 100 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது.

**● சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்**

நாளொன்றுக்கு 830 மில்லியன் லிட்டர் குடிநீர் மட்டுமே விநியோகித்து வந்த நிலையில் 01.09.2021 முதல் 1000 மில்லியன் லிட்டர் ஆக அதிகரிக்கப்பட்டு, தற்பொழுது 1100 MLD பொதுமக்களுக்கு விநியோ கிக்கப்பட்டு வருகிறது.

ரூ.933.19 கோடி திட்ட மதிப்பீட்டில், 15 மண்டலங்களில் உள்ள பகுதிகளில் குடிநீர் வழங்கல் திட்டப் பணிகள் இதன் மூலம் 12 இலட்சத்து 74 ஆயிரத்து 720 மக்கள் பயன் பெற்று வருகின்றனர்.

ரூ.6423.77 கோடி திட்ட மதிப்பீட்டில், 15 மண்டலங்களில் உள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள். இதன் மூலம் 21 இலட்சத்து 82 ஆயிரத்து 706 மக்கள் பயன் பெற்று வருகின்றனர்.

ரூ.1516.82 கோடி திட்ட மதிப்பீட்டில், நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் 9 இலட்சம் மக்கள் பயன் பெற்று வருகின்றனர்.

ரூ.4276.44 கோடி திட்ட மதிப்பீட்டில், பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட தென்கிழக்காசியாவிலே மிகப்பெரிய கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் 22 இலட்சத்து 67 ஆயிரம் மக்கள் பயன் பெறுவர்.

ரூ.115.41 கோடி திட்ட மதிப்பீட்டில், சென்னை குடிநீர் வாரியத்தின் அனைத்து மண்டலங்க ளுக்கும் 58 கழிவுநீர் அகற்று இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 28 கோடி மதிப்பீட்டில் தலைமை அலுவலகம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. ரூ. 18.58 கோடி மதிப்பீட்டில் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையமும் புவியிடம் சார்ந்த தகவல் அமைப்பு மற்றும் மேலாண்மை மையமும் அமைக்கப்பட்டுள்ளது.

**● சென்னைகுடிநீர்வாரியத்தின்சார்பில் வடகிழக்குபருவமழைமுன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடுபணிகள்**

பருவ மழையின் போது கழிவுநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்வதற்காக 299 தூர்வாரும் இயந்திரங்கள், 73 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்கள், 225 ஜெட்ராடிங் வாகனங்கள் என மொத்தம் 597 கழிவுநீரகற்றும் இயந்திரங்கள், பிற மாவட்டங்களிலிருந்து கூடுதலாக வரவழைக்கப்பட்ட 90 கழிவுநீர் ஊர்திகள் என மொத்தம் 687 கழிவுநீரகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் பணிகளை 2,149 களப்பணியாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

தற்போதுவரை மொத்தம் உள்ள 1,60,092 இயந்திர நுழைவாயில்களில் 1,54,214 நுழைவாயில்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4,156 கிலோமீட்டர் கழிவுநீர் கட்டமைப்பின் நீளத்தில் இதுவரை 4,050 கிலோ மீட்டர் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

8 நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், 130 குடிநீர் பகிர்மான நிலையங்கள், 22 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் 356 கழிவுநீர் உந்து நிலையங்கள் 24 மணி நேரமும் செயல்படுகிறது.

இந்நிலையங்களுக்கு தேவையான 102 ஜெனரேட்டர்கள் உரிய எரிப்பொருளுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

அழுத்தம் குறைவான பகுதிகள், குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்று வரும் இடங்களில் 15.10.2024 அன்று 529 லாரிகள் மூலம் 4,463 நடைகள் இரவு 9 மணி வரை வழங்கப்பட்டு 16.10.2024 அன்று நன்பகல் 12.00 மணி வரை 2215 நடைகள் வழங்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள 300 நிவரான மையங்கள் மற்றும் 90 சமையல் கூடங்களுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

8754 குடிநீர் தொட்டிகள் நீர் நிரப்பபட்டு பொது மக்கள் பயன் பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் 711 தெரு நடைகளும் வழங்கப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை பரிசோதனை செய்வதற்காக 900 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு உரிய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பாதுகாப்பான குடிநீர் வழங்கவது உறுதி செய்யப்படுகிறது.

குடிநீர் விநியோக நிலையங்களில் தேவையான அளவுகிளோரின் பவுடர், படிகாரம், சுண்ணாம்பு போன்ற பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

குடிநீர் குழாய்களில் கழிவுநீர் கலக்காமல் இருப்பதற்காக முன்னேற்பாடு பணிகள் மற்றும் சாலைகளில் பழுதாகி உடைந்துள்ள இயந்திர நுழைவாயில் மூடிகள்கண்டறியப்பட்டு உடனடியாக மாற்றும் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

மேலும், பொதுமக்கள் கழிவுநீர கற்றல் தொடர்பாக புகார்கள் தெரிவிப்பதற்கு ஏதுவாக 24 மணிநேரமும் இயங்கக்கூடிய கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது.

இம்மையத்தை தொடர்பு கொள்வதற்கு பொதுமக்கள் 044-4567 4567 (20 இணைப்புகள்) மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண்.1916-ல் தொடர்புகொள்ளலாம். பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட பகுதி அலுவலகங்களுக்கு தெரிவிக்கப்பட்டு குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

ரூ.7,737.17 கோடி திட்ட மதிப்பீட்டில் 4 மாநகராட்சிகள், 13 நகராட்சிகள், 43 பேரூராட்சிகள் மற்றும் 9,079 ஊரக குடியிருப்பு களுக்கு 62 குடிநீர்த் திட்டப்பணி கள். நாளொன்றுக்கு 685.09 மில்லியன் லிட்டர் (எம்.எல்.டி.) பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநோயிகிக்கப்படு கிறது, இதன்மூலம்109.33 இலட்சம் மக்கள் பயன்பெருகிறார்கள்.

ரூ.1,206.34 கோடி திட்ட மதிப்பீட்டில், 6 நகராட்சிகள் மற்றும் 6 பேரூராட்சிகளில் 13 பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் நாளொன்றுக்கு

120.76 மில்லியன் லிட்டர் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்யும் வகையில் நிறை வேற்றப்பட்டு, 11.24 இலட்சம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

ரூ.1,768.08 கோடிக்கு 6 மாவட்டங்களைச் சார்ந்த 3 மாநகராட்சிகள் மற்றும்

3 நகராட்சிகளிலுள்ள 5.96 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில், 6 பாதாள சாக்கடைத் திட்டங்கள் தொடங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் இரண்டாம் கட்டத்திற்கு வெளிப்புற நிதியுதவி பெற (EAP Funding) நடவடிக்கை.

**● தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்களில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

ஆற்றுப்படுகையில் உள்ள நீர் உறிஞ்சு கிணறு மற்றும் பிற நீர் ஆதாரங்களிலிருந்து நீர் கொண்டு வரும் நீரேற்று குழாய், மின் இறைப்பான்களுக்காக மின் கம்பிகள் கொண்டு செல்லும் குழாய்கள் ஆகியவை மணல் அரிப்பால் வெளியில் தெரியாத வண்ணம் இருப்புப் பொருத்திகள் (Anchorage arrangements) கூடுதலாக பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது.

தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையங்களில் வெள்ளம் புகாவண்ணம் நீருந்து நிலையம், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவற்றைச் சுற்றி வெள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் எப்போதும் குடிநீர் நிரப்பி வைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ள பாதிப்பு ஏற்படும்பொழுது சேதப் பணி களுக்குத் தேவையான குழாய்கள் மற்றும் இணைக்கும் பொருட்கள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. 121 ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஜெனரேட்டர்கள் இல்லாத இடங்களில், வாடகை ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் உள்ளது.

குடிநீரில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குளோரின் அளவு (0.2 ppm) உறுதி செய்யபட்டுள்ளது. 240 -டன் குளோரின் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பில் உள்ள 113 ஆய்வகங்களில் தினசரி சுமார் 4,500 குடிநீர் மாதிரிகள்சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகிறது. அனைத்து கிரா மத்திலும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் வீட்டிணைப்பு குழாய்களில் குடிநீர் மாதிரிகள் பரிசோதனைககாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பொதுமக்களின் குறைகளைத் தீர்க்க அவசர தகவல் மையம் (அலைபேசி. எண். 94458 02145) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது.

ரூ.145.48 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டங்களின் அனைத்து உட்கட்டமைப்புகளும் நிரந்தரமாக சீரமைக்கபட்டு வருகிறது.

ரூ.18.70 கோடி மதிப்பீட்டில் குடிநீர் பற்றாக் குறையை போக்கிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**● நகராட்சி நிருவாகம் மற்றும் பேரூராட்சிகள்**

138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் மற்றும் புதியதாக உருவாக்கப்பட்ட 6 மாநகராட்சிகள் ஆகியவற்றிற்கு ஆண்டுதோறும் ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் “கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் தொடக்கம்.

ரூ.3,000 கோடி நகராட்சிகளுக்கும் மற்றும் பேரூராட்சிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு ரூ.550 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுமக்கள் பங்களிப்புடன் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2,04,860 நபர்களுக்கு வேலைக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. ரூ.75 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

220 உள்ளாட்சிகளில் (மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள்) உள்ள 2,256 பள்ளிகளில் 2,48,041 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.65.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

ரூ.979.34 கோடி திட்ட மதிப்பீட்டில் 159 நகர்ப்புர உள்ளாட்சிகளில் பழைய தேக்கக் கழிவுகளை உயிரி அகழ்வு முறையில் அகற்றுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

11 மாநகராட்சிகளில் ரூ.10,797.69 கோடி மதிப்பிலான 726 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நகராட்சிகளில் ரூ.6,513.25 கோடி மதிப்பீட்டில் 446 பணிகள் மேற்கொள்ளப்ப ட்டுள்ளன.

ரூ.857.72 கோடி திட்ட மதிப்பீட்டில் 38 பேருந்து நிலை யங்கள், ரூ.31.43 கோடி திட்ட மதிப்பீட்டில் 16 பேருந்து நிலை யங்களில் மறு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

18 மாநகராட்சிகளில் ரூ.9,386.23 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் நகராட்சியில் ரூ.52.60 கோடி மதிப்பீட்டிலும், ஆம்பூர் நகராட்சியில் ரூ.165.55 கோடி மதிப்பீட்டிலும், திண்டிவனம் நகராட்சியில் ரூ.268 கோடி மதிப்பீட்டிலும், பொன்னேரி நகராட்சியில் ரூ.62.82 கோடி மதிப்பீட்டிலும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

மேட்டூர் நகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்காக ரூ.10.78 கோடி மதிப்பீட்டிலும், விழுப்புரம் நகருடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ரூ.263 கோடி மதிப்பீட்டிலும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

16 மாநகராட்சிகள் மற்றும் 119 நகராட்சிகளில் தற்போதுள்ள 3,31,895 தெரு விளக்குகளை ரூ.374.09 கோடி மதிப்பீட்டில் LED விளக்குகளாக மாற்றவும் மற்றும் விடுபட்ட பகுதிகளில் 77,667 புதிய LED தெருவிளக்குகளை ரூ.118.35 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ரூ.65.10 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சி பள்ளிகளுக்கு 136 புதிய வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது,

ரூ.75.60 கோடி மதிப்பீட்டில் நகராட்சி பள்ளிகளுக்கு 176 புதிய வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரூ.39.06 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சி பள்ளிகளுக்கு 225 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை மராமத்து செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

ரூ.45.30 கோடி மதிப்பீட்டில் நகராட்சி பள்ளிகளில் 310 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

ரூ.336.77 கோடி மதிப்பீட்டில் 646 பூங்காப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ரூ.193.56 கோடி மதிப்பீட்டில் 100 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ரூ.227.39 கோடி மதிப்பீட்டில் சென்னை புற நகர்ப்பகுதிகளில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கு தாம்பரம் மாநகராட்சி, ஆவடி மாநகராட்சி மற்றும் மாங்காடு, குன்றத்தூர் மற்றும் திருவேற்காடு நகராட்சிகளில் 99.87 கி.மீ. நீளத்திற்கு 74 மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரூ.491.29 கோடி மதிப்பீட்டில் நகராட்சிகளில் 165 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

9 நகராட்சிகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

**● நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சார்பில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்பாடு பணிகள்**

கனமழையை எதிர்கொள்ள சென்னை நீங்கலாக 24 மாநகராட்சிகள் மற்றும் 134 நகராட்சிகளில் அமைந்துள்ள 18791கி.மீ மழைநீர் வடிகால்களில் 16356கி.மீ தூர்வாரப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை நீங்கலாக அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் 1779கி.மீ அளவிற்கு அமைந்துள்ள நீர் செல்லும் வழி தடங்கள்(Channels) 1041கி.மீ அளவிற்கு தூர்வாரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

88,344 கல்வெட்டுகள்(Culvert) தூர்வாரப்பட்டுள்ளன. 24 மாநகராட்சிகள் மற்றும் 134 நகராட்சிகளில் 741 தாழ்வான பகுதிகள் கண்டறிந்து அனைத்து அடிப்படை வசதிகளுடன் 783 நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புர உள்ளாட்சிகளில் தாழ்வான பகுதிகள் கண்டறியப்பட்டு அங்கு தேங்கி நிற்கும் மழைநீரினை வெளியேற்ற 560 எண்ணிக்கை யான Diesel Engine, Pump Motor, 161 எண்ணிக்கையிலான Sludge Lorry, 366 எண்ணிக்கையான Generator, 47,640 எண்ணிக்கையான மணல் மூட்டைகள் தயார் நிலையில் உள்ளன.

**● பேரூராட்சிகள் சார்பில் மேற்கொள்ளப் பட்ட வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள்**

490 பேரூராட்சிகளில் உள்ள 7447 கி.மீ நீளமுள்ள மழைநீர் வடிகால்களில் 7141 கி.மீ நீளம் தூர்வாரப்பட்டுள்ளது.

20457 சிறுபாலங்களில் (Culvert), 20249 சிறுபாலங்கள் தூர்வாரப்பட்டுள்ளது. 3140 நிவாரண மையங்கள் அனைத்து அடிப்படை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மழைநீரினை அப்புறபடுத்துவதற்காக 550 எண்ணிக்கை நீர் இரைப்பான்கள் (Diesel Engine, Pump set), 350 எண்ணிக்கையான மின்னாக்கிகள் (Generator), தயார் நிலையில் உள்ளன.

15.10.2024 அன்று வெள்ள நிவாரண பணிகளில் 62 மண் வாரி எந்திரங்கள், 45 டீசல்பம்பு செட்கள் 42 ஜெனரேட்டர் எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டது. அய்யலூர் பேரூராட்சியில் 200 பேர் மற்றும் இரு கூர் பேரூராட்சியில் 67 பேர் நிவாரண மையத்தில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் கூறினார்.




நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு , நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் வடகிழக்குப் பருவமழையினைத் தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் குறித்தும், துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்தும் நேற்று முன்தினம் (16.10.2024) ரிப்பன் கட்டட அலுவலகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். இந்நிகழ்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, எம்.பிருதிவிராஜ், (வருவாய் (ம) நிதி), சென்னைக் குடிநீர் வடிகால் வாரிய செயல் இயக்குநர் செ.சரவணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


## தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் ஈரோடு மண்டல தொ.மு.ச. நிர்வாகிகள்!

### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. ஈரோடு மண்டலத்தின் (பதிவு எண். 56/ERD, பேரவை இணைப்பு எண். 393) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 10.10.2024 அன்று மதுரை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் சி.கருணாநிதி அவர்களை தேர்தல் ஆணையாளராகவும், தலைமைக் கழகத்தின் மேலிடப் பார்வையாளர் வழக்கறிஞர் அ.சரவணன் மேற்பார்வையிலும் நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

**மத்திய சங்க நிர்வாகிகள்**

தலைவர் – ஜெ.நவநீதகுமார் (பணி எண் 9695)

**துணைத் தலைவர்கள்**

1) எஸ். கோடீஸ்வரன் (பணி எண் J08709)
2) வி. துரைசாமி (பணி எண் C40291)
3) பி. தியாகராஜன் (பணி எண் 21915)
4) ஆர். சரவணன் (பணி எண் J15607)
5) கே. ஜபருல்லா (பணி எண் C41763)

**பொதுச்செயலாளர் –**
பி.எஸ்.பாலகுமார் (பணி எண் 9436)

**துணைப்பொதுச்செயலாளர் –**
ஏ.எஸ்.தங்கராஜ் (பணி எண் 6803)

**பொருளாளர் –**
எஸ்.கிருஷ்ணமூர்த்தி (பணி எண் 40628)

**அமைப்புச் செயலாளர் –**
ஏ. வசந்தகுமார் (பணி எண் 43970)

**பிரச்சார செயலாளர் –**
எம்.தங்கவேலு (பணி எண் 9935)

**தலைமைநிலையச் செயலாளர் –**
எம்.தங்கராஜ் (பணி எண் C40350)

**செயலாளர்கள் –**

1) சி.சரவணகுமார் (பணி எண் C40539)
2) எஸ்.செந்தில்குமார் (பணி எண் J08857)
3) டி.மோகனசுந்தரம் (பணி எண் C40890)

இடம்: கலைஞரகம்
நாள்: 16.10.2024

**மு.சண்முகம், எம்.பி.**
பொதுச் செயலாளர்,
தொ.மு.ச. பேரவை